1981 மார்ச் 24]

திரு. ஏ. டி. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, சேக்கல்முடியிலிருந்து கோவைக்கு எக்ஸ்பிரஸ் பஸ் ஓடிக் கொண்டிருப்பது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். சேக்கல்முடியிலிருந்து கன்னியாகுமரிக்கு விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(பதில் இல்லை)

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய டிப்போ.

*வினா எண் 469— **திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்குப் புதிய டிப்போ கட்டுவதற்கான இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதா ?

(ஆ) வேலை எப்போது துவக்கும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இன்னும் இல்லை.

(ஆ) இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வருவாய் அதிகாரிகள் இடத்தைப் பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தினிடம் ஒப்படைத்த பின்னர் வேலைகள் தொடங்கும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : துணைத் தலைவர் அவர்களே, போடி நகரத்திலே அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் வருகின்ற 60 பஸ்கள் நிறுத்த வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே விரைவாக நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அங்கே இருக்கின்ற சிக்கலைப் பார்த்துத்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. விரைவாக அரசாங்கம் செய்வதற்கு மீண்டும் அவர்களைத் துரிதப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : அரசுப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த டெப்போக்களில் ஒரு கழகத்தைச் சேர்ந்த டெப்போவைச் சேர்ந்த வண்டியை இன்னொரு டெப்போவிலே பழுது பார்க்க மறுக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஒரு டெப்போ வண்டி பழுது பட்டால் அதைப்

பழுது பார்க்கவும் அதற்குத் தேவையான டயரோ, டியூப்போ அல்லது மற்ற உதிரிப் பாகங்களோ தேவையென்றால் அதைக் கொடுக்க மறுக்கிறார்கள். இதன் காரணமாக வீண் காலதாமதமும் பயணிகளுக்கு கஷ்டமும் ஏற்படுவதை உணர்ந்து எந்த டெப்போ வண்டியாக இருந்தாலும் இன்னொரு டெப்போவிலே உதிரி பாகங்களைப் பெற்றுக் கொண்டு பழுது பார்க்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஒரு போக்குவரத்துக் கழகத்தினுடைய டெப்போ வண்டிக்கு இன்னொரு டெப்போவிலிருந்து கொடுத்தால் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படும், கணக்குகள் சரியாக வைத்துக் கொள்ள முடியாது. தவறுகள் ஏற்படும் என்பதை எண்ணித்தான் அதைத் தடைப்படுத்தி வைத்திருக்கிறோம். இருந்தாலும், சிறிய வேலைகளைச செய்து கொடுக்க வேண்டுமென்பது நடைமுறையில் இருக்கிறது. பெரிய வேலைகளாக இருந்தால் சிக்கல் வரும், தவறுகள் நடக்கும் என்பதால் நிறுத்தி வைத்திருக்கிறோம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : சென்னையிலிருந்து போடிக்கு சூப்பர் எக்ஸ்பிரஸ் விட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களிடம் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் அதுகுறித்து ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி என்பதாக தங்களுக்குத் தேவையானவைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுடைய ஆர்வத்தை மனதிலே கொண்டு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலே தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு நிரம்பப் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன, ஆனால் டெப்போக்கள் தொடங்கப்படவில்லை, அதனால் கிராமங்களுக்கு பேருந்துகள் விட முடியவில்லை, எனவே இந்த நிதியாண்டிலாவது அதிகமான டெப்போக்களைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா ? சாத்தூரில் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : டெப்போக்கள் நிறைய வேண்டுமென்று சொல்லித்தான் அரசாங்கம் எங்கெங்குத் தேவையோ அங்கே இடங்களை ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கே தேவை என்று சொல்கிறார்களோ அதை ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறோம்.